11 செப்டம்பர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 24 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:
**மலேசிய தினம் (செப் 16)**



# அனைவரும் கடவுளுக்கு முக்கியமானவர்கள்

Art: ©https://www.artleaders.com/product/jesus-craig-alan/

ஊதாரி மகனின் விறுவிறுப்பான கதை, கடவுள் எப்படிப்பட்டவர் என்பதைப் பற்றி விரைவான ஒரு கண்ணோட்டத்தை நம்முன் வைக்கிறது. ஒரு பாவி தம்மைக் கண்டுபிடிக்குபோது கடவுள் அதை மிகவும் விரும்புகிறார். இதுபோன்ற ஒரு செயல் நிகழும்போது விண்ணகத்தில் மிகவும் மகிழ்ச்சி உண்டாவதாகக் கூறப்படுகிறது. நம்முடைய வாழ்க்கையைப் பற்றி ,அதில் நடக்கும் அற்ப நிகழ்வாக இருந்தாலும் அதைக் கடவுளிடம் நம்பிக்கையோடுப் பகிர்ந்துகொள்ளும்போது கடவுள் எவ்வாறு உணர்வார் என்று சற்றுக் கற்பனை செய்து பாருங்கள்.

ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் என்பதையும் அனைவரையும் காப்பற்றவே இயேசு வந்தார் என்பதையும் இந்த ஊதாரி மகன் உவமை நமக்கு எடுத்துக்கூறுகிறது. இயேசுவிடம் பலர் குறைவான நம்பிக்கைக் கொண்டிருந்தபோதும். இரத்தப்போக்கு இருந்த பெண் குணம் பெற்றதும், பார்வையற்றவர் பார்வைபெற்றது போன்ற அருளடையாளங்களையும் இதனால் தான் செய்தார் என்பதை நாம் இப்போது புரிந்துகொள்கிறோம். **“இருக்கின்றவர் நாமே” என்னும் மாபெரும் இறைவன் அனைவரின் மீதும் அன்பு வைத்துள்ளார்.**

சில சமயங்களில் நாம் குடும்பத்தையும் நட்புகளையும் இழக்கிறோம். ஏன் நம்மையும் கூட இழந்துவிடுகிறோம். தொலைந்துபோன ஒரு நண்பனை மீண்டும் கண்டுபிடிக்கும்போதோ அல்லது உடைந்துபோன நட்பை மீண்டும் சீர்படுத்தும்போதோ, மறைந்திருக்கும் புதையலைக் கண்டறிவதுபோலிருக்கும். மனவருத்தம் கொண்டிருந்த நண்பனோடு மீண்டும் ஒப்புரவாகும் உணர்வை எண்ணிப்பாருங்கள். நாம் கடவுளின் சாயலாகவும், அவரின் பாவனையாகவும் படைக்கப்பட்டிருப்பதால், நாம் அவரைத் தேடிக்கண்டடையும்போது, குறிப்பாக, வழிதவறி மீண்டும் அவரிடம் திரும்பிவரும்போது, கடவுள் இவ்வாறு உணர்கிறார். ஊதாரி மகன் கதையில், வரும் தந்தை, தம் மகன் வீடு திரும்பியதும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார். கடவுளும் இவ்வாறு தான் மகிழ்ச்சியடைவார் என்று இயேசு கூறுகிறார். தந்தை மகனை வழியிலேயே எதிர்கொண்டு சென்று சந்திப்பது, கடவுளே அவ்வாறு வருவதைப் போல கற்பனை செய்துபாருங்கள். இதைவிட சிறந்த வரவேற்பை நாம் எதிர்பார்க்கமுடியுமா? **அவரிடம் திரும்பி வர இப்போது இருக்கும் நேரத்தைவிட சிறந்த நேரம் உண்டா?**

நம்மால் கவனிக்கப்படவேண்டிய எண்ணற்ற மக்கள் வெளியே உள்ளார்கள் என்பதை அடிக்கடி நாம் மறந்துவிடுகின்றோம். இந்த உலகம் அவர்களைப் புறக்கணித்து, அவர்கள் மீதான நம்பிக்கையை இழந்திருக்கலாம். நாமும் அவர்களை மறந்திருப்போம். இயேசு பாவிகளின் வாழ்வு மாற்றப்பட்டவேண்டுமென்று , அவர்களைத் தேடிச்சென்று அவர்களோடு உண்ணவும், குடிக்கவும் செய்தார். நம்முடைய வாழ்விலும் இதைப்போலவே நம்மாலும் செய்யமுடியும். நம்பிக்கை இழந்தோரின் வாழ்வில் நம்பிக்கையூட்டுவதும், தொலைந்துபோன நண்பரைத் தேடிக் கண்டுபிடிப்பதும் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தரும். இதுபோன்ற கதைகளுக்கு நிச்சயம் மகிழ்ச்சியான முடிவு உண்டு. மீண்டும் உறவை ஏற்படுத்திக்கொள்ளும் மக்கள் நம் வாழ்வில் உண்டா? இவ்வாறு இருந்தால், காணாமல் போன நாணயத்தைத் தேடிக் கண்டடைந்த பெண்ணைப் போலவும், இழந்த ஆட்டைத் தேடிக்கண்டுபிடித்த ஆயரைப் போலவும் நாம் பெருமகிழ்ச்சி அடையலாம். கடவுள் தம் மகனை நம்பொருட்டு இந்த உலகில் அனுப்பியபோது கொண்டிருந்த பெருமகிழ்ச்சியைப்போல அவரில் அந்த அன்பை வெளிக்காட்டி, அவரோடு ஒப்புரவாகும்போது கடவுள் இன்னும் பெருமகிழ்ச்சி அடைவார். **கடவுளுக்கு அனைவரும் முக்கியமானவர்கள்** ✣

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

அவ்வாறே, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்துக் கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என உங்களுக்குச் சொல்கிறேன்.

**(லூக்கா 15:10)**

**இன்றைய வாசகங்கள்:**

விடுதலைப் பயணம்: 32: 7-11, 13-14;

திபா: 51: 3-4, 12-13, 17 & 19;

1 தீமோத்தேயு: 1: 12-17;

லூக்கா: 15: 1-32 (அ) 1-10.

INTERNAL CIRCULATION ONLY
BUL 37/2022

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org